# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2009 ஜுலை திங்கள் 27.07.2009–ம் நாள் திங்கள்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**முன்னிலை. திரு.ஜே.ஜேசையா அவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்.**

**வருகை புரிந்தோர்.** திருமதி.மேரி அல்போன்சாள், திருமதி.A.T.லதா, திரு.எம்.சுரேஸ், திருமதி.செலஸ்டினம்மாள், திரு.லியோன்ஸ், திரு.ஜாண்லோப்பஸ், திருமதி.ஜாண்சி, திருமதி.சூசைமரியான், திருமதி.லூர்துமேரி, திரு.முருகன், திருமதி.கோமளா, திரு.முனாப், திரு.கலீல் ரகுமான், திருமதி.சீதை மற்றும் திருமதி.சீலாஜெயந்தி ஆகியோர்.

**பொருள் எண் : 1**
**30.06.2009–ம் தேதிய சாதாராணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்டும் போது கட்டுமான காலத்திற்கு காலியிட வரி வசூலிக்கப்பட வேண்டும். காலிமனை வரி மூலதன மதிப்பில் 0.1% வசூல் செய்ய மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** ஏற்கனவே வரிவிதிப்பு செய்யப்பட்டு வந்த குடியிருப்புகள் நகராட்சிக்கு எவ்வித தகவலும் இன்றி கட்டிட விதிமுறைகளுக்கு மாறாக இடித்து அகற்றி விட்டு அந்த இடத்திலிருந்த குடியிருப்பிற்கான வரியை ரத்து செய்யுமாறு கேட்டு விண்ணப்பிக்கின்றனர். இதனால் நகராட்சிக்கு வரக்கூடிய வருவாயில் இழப்பு ஏற்படுகிறது. ஒரு சிலர் அதே இடத்தில் புதிய வீடு கட்டி ஏற்கனவே இருந்த பழைய வரியை ரத்து செய்து, புதிய வரிவிதிப்பு செய்ய கோருகின்றனர். இவ்வாறு வீடு கட்டி புதிய வரிவிதிப்பு செய்யும் போது நகராட்சிக்கு இழப்பு ஏதுமில்லை. ஆனால் இடித்த இடத்தை காலியாக விடும் பட்சத்தில் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே தமிழ்நாடு நகராட்சி நடைமுறை நூல் தொகுதி –II விதி 4/6–ன்படி காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படாமல் உள்ளது. ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண்.721 நாள் 27.07.1998–ல் மூலதன மதிப்பில் 0.5% வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்படாமல் விடப்பட்டுள்ளது. இவ்வாறு செய்யப்படாமல் உள்ளது தொடர்பாக தணிக்கை துறையினரால் 2003–04–ம் ஆண்டில் பத்தி எண். 27–ல் தணிக்கைத்தடை எழுப்பப்பட்டு அத்தணிக்கைத்தடை நிலுவையாக உள்ளது. எனவே மூலதன மதிப்பில் ரூ.0.1% (ஆயிரம் ரூபாய்க்கு ஒரு :ருபாய் மட்டும்) காலிமனை வரியாக வரிவிதிப்பு செய்யலாம். மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
**தீர்மானம் எண்.905: அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2009–ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.
**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண்.906: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியில் 01.06.2009 முதல் 30.06.2009 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட தலைப்பிலான செலவின சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
**(1.) சுனாமி நிதி செலவு சீட்டு**
**06/2009**
97, 98, 99, 100, 101, 102, 103, 104, 105, 106 107 108 109 110 111 112 113 114 115 116 117 118 119 120 121 122 123 124 125 126 127 128 129 130 131 132 133 134 135 136 137 138 139 140 141 142 143 144 145 146 147 148 149 150 151 152 153 154 155 156 157 158 159 160 161 162 163 164 165 166 167 168 169 170 171 172 173 174 175 176 177 178 179 180 181 182 186 187 188 189 190 191 192 193 194 195 196 197 198 199 200 201 202 203 204 205

206 207 208 209 210 213 214 215 216 217 218 219 220 230 243 244 245 246 247 248 249 250 266 269 270 271 272 273 274 274A 274B

**(2.) பொது நிதி செலவு சீட்டுகள்:**
**06/2009**
90, 91, 92, 93, 94, 95, 96, 156, 211, 212, 223, 224, 225, 226, 227, 228, 229, 232, 233, 234, 235, 236, 237, 238, 239, 240, 241, 242, 251, 252, 253, 254, 255, 256, 257, 258, 262, 267, 268.

**(3.) குடிநீர் திட்ட நிதி செலவு சீட்டுகள்:**
**06/2009**
18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35.

**(4.) SFC: O and M Gap Filling Fund:-**
**06/2009**
183, 184, 185, 259, 260, 261, 263, 264, 265

**(5) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப்பணி செலவு சீட்டுக்கள்:**
**06/2009**
221, 222, 231
அ.குறிப்பு: : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண்.907: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**
இந்நகராட்சியில் சுகாதாரப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளர்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களுக்காக நாகர்கோவில் நகராட்சிக்கு பணி மாறுதல் கேட்டு விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

| வ.எண். | பணியாளர் பெயர் | காரணம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.கணேசன் | தனது மனைவி கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வங்கி, நாகர்கோவில் கிளையில் பணிபுரிந்து வருவதால். |
| 2 | திரு.ஆர்.தங்கராஜ் | குடும்ப சூழ்நிலை கருதியும், குழந்தைகளின் மேல்நிலைப் படிப்பு கருதியும். |

துப்புரவு மேற்பார்வை பணியாளர்கள் இடமாறுதல் கோரினால், அவர்களை மாறுதல் கோரும் நகராட்சிக்கு அனுப்ப இந்நகர்மன்றத்தின் இசைவு வேண்டும். மேலும் மாறுதல் கோரும் நகராட்சியில் மேற்படி பணியிடங்கள் காலியாக இருக்க வேண்டும். மேலும் மாறுதல் கோரும் நகராட்சியில் அவர்களை எடுத்துக் கொள்ளவும், மாறுதல் கோரும் நகர்மன்றத்தின் இசைவு வேண்டும். எனவே மேற்காணும் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்களை நாகர்கோவில் நகராட்சிக்கு மாறுதலில் செல்ல அனுமதிக்க நகர்மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு:** மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
**தீர்மானம் எண்.908: மாறுதல் விண்ணப்பங்களுக்கு இசைவு அளித்திடுவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**
குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கணியாக்குடியில் கதவு எண்.17–46/1 –ன் அருகில் 3" pvc line உடைப்பு ஏற்பட்டுள்ளது. கதவு எண். 17–43/3 – முன் உ.ள் பொதுக்குழாயை மாற்றி பழுதுகளை சரி செய்வதற்கும், சீம்பிளிவிளை சேவா பாரதி முன் 2" pvc line உடைப்பை சரி செய்வதற்கு மதிப்பீடு ரூ. 3,400/– செலவாகும். மேற்கண்ட பணியை செய்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண்.909: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்காரவேலன் காலனியில் Slaughter house அருகில் E.B.Pole No. F-II/85 –Opposite side –ல் Beach tank–க்கு செல்லும் Pumping line உடைப்பை சரி செய்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 2150/– செலவாகும். மேற்காணும் பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.910: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

SFC – O&M Gap Filling Fund திட்டத்தின்கீழ் 2007–08–ம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 7 வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க 13.02.2009 அன்று தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் தினகரன் நாளிதழுக்கு ரூ. 2,640/– செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை தினகரன் நாளிதழுக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.911: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சியில் உள்ள மண் சாலைகளை சிமேன்ட் தளமாக மாற்றுவதற்கு Infra Gap O&M Gap Filling Fund 2008–09 திட்டப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அது தொடர்பான விளம்பரத்தினை தினகரன் தினசரி நாளிதழில் (20.02.2009) அன்று விளம்பரம் செய்த வகையில் தினகரன் நாளிதழுக்கு ரூ. 2160/– செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை தினகரன் நாளிதழுக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.912: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட கடிதங்களில் ரூ.10.00 லட்சத்திற்கு அதிகமான மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் E.tender மூலம் நடைபெற வேண்டும் எனவும், ஒவ்வொரு நகராட்சியிலும் ஆணையர் மற்றும் பொறியாளருடன் அனைத்து ஒப்பந்தக்காரர்களும் Digital Signature Card எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டதின் பேரில் நகராட்சி பொறியாளருக்கு Digital Signature Certificate பெறுவதற்கும்,. SCs Corporate Solutions என்ற பெயருக்கு சென்னையில் பெறத்தக்க கேட்பு வரைவோலையை அவசரம் அவசியம் கருதி ரூ. 2400/–க்கு எடுத்து அனுப்புவதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அ.குறிப்பு :** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) ரூ.2400/–க்கு டிமான்ட் டிராப்ட் அனுப்பியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.913: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள Bore No. 5–ல் மோட்டார் பழுதடைந்து உள்ளது. மேற்கண்ட பகுதியில் உள்ள மோட்டாரை சரி செய்வதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.10,000/– செலவாகும். எனவே மேற்கண்ட பணியினை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.914: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட KSSS காலனி பம்பிங் லைன் உடைவு, விவேகானந்தா சாலை செல்லும் திருப்பில் உடைவு, T.B. ஜங்ஷனில் லைன் உடைவு ஏற்பட்டுள்ளது. மேற்காண் உடைவுகளை சரி செய்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 3500/– செலவாகும். மேற்காண் பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.915: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கல்லத்திவிளை சுனாமி வீட்டின் அருகில் குடிநீர் குழாயில் உடைவு, கொட்டில்பாடு கோயில் முன் நீரேற்றும் குழாயில் உடைவுகள் ஏற்பட்டுள்ளன. மேற்காண் உடைவுகளை சரி செய்வதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.1800/– செலவாகும். மேற்காண் உடைவுகளை சரி செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.916: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ராபின் மருத்துவமனை தெருவில் கதவு எண்.5/35.எ. அருகில் A.C. Pipe பழுதடைந்து உடைவு ஏற்பட்டுள்ளது. மேற்காண் உடைவை சரி செய்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 20,000/– செலவாகும். எனவே பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.917: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை திருப்பில் 2” குடிநீர் விநியோகம் செய்யும் குழாயில் உடைவு, சீம்பிளிவிளை திருப்பில் 6” குடிநீரேற்றும் குழாயில் உடைவு, சாயக்காரக்குடியில் நீரேற்றும் குழாயில் உடைவுகள் ஏற்பட்டுள்ளன. மேற்காண் உடைவுகளை சரி செய்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 4,900/– செலவாகும். குடிநீர் குழாய் பழுதுகளை சரி செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.918: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட Bore No. 2 –ல் Nipple உடைவு, துறைமுகத்தெரு உடைவு, மரமடி அருகில் Pipe line உடைவு ஆகிய உடைவுகளை சரி செய்வதற்கு ரூ. 2500/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மான எண்.883 நாள் 30.06.2009 மூலம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 10.07.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்.ள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 0.12% குறைவு<br>( ரூ. 2445.40 ) |
| 2 | திரு. விஜய குமார் | 8.69% அதிகம்<br>( :ரு.2660.75 ) |
| 3 | திரு. சுந்தர் | 33.63% அதிகம்<br>( :ரு.3271. 50 ) |

**அ.குறிப்பு**: பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளி அளித்தவர்களில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.12% மதிப்பீட்டை விடகுறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.919: குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் விலைப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட Bore No. 10 –ல் Nipple leak Non Return valve leak, பர்னட்டிவிளை Tank–க்கு ஏற்றுகிற லைன் உடைவு ஏற்பட்டுள்ளது. மேற்படி உடைவுகளை சரி செய்ய்தற்கு ரூ.4000/– மதிப்பீட்டில் செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மான எண்.883 நாள் 30.06.2009 மூலம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 10.07.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 0.39%மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 3851. 00 ) |
| 2 | திரு. விஜய குமார் | 3.31% மதிப்பீட்டை விட அதிகம் ( :ரு. 3987 .00 ) |
| 3 | திரு. சுந்தர் | 10.17 % அதிகம் ( ரு.4259. 00 |

**அ.குறிப்பு**: பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளி அளித்தவர்களில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.39% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.920: குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்காரவேலன் காலனியில் துறைமுகத்தெரு, வெள்ளிப்பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களிலுள்ள பைப் லைன் உடைவை சரி செய்வதற்கு ரூ.5000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மான எண்.883 நாள் 30.06.2009 மூலம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 10.07.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்.ள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 0.05%மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 4968. 00 ) |
| 2 | திரு. விஜய குமார் | 2.9% மதிப்பீட்டை விட அதிகம் ( :ரு. 5115 .20 ) |
| 3 | திரு. சுந்தர் | 7.41 % அதிகம் ( :ரு.5339. 00 |

**அ.குறிப்பு**: பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளி அளித்தவர்களில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.05% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.921: குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் விலைப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெருவில் பைப் உடைவு, ஆசாரிமார் தெருவில் பைப் லைன் உடைவு, சாயக்காரக்குடியில் பம்பிங் லைன் உடைவு ஆகிய பைப் லைன் உடைவுகளை சரி செய்யும் பணியை ரூ.3900/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மான எண்.883 நாள் 30.06.2009 மூலம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 10.07.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்.ள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 0.13%மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 3820. 20 ) |
| 2 | திரு. விஜய குமார் | 10.00% மதிப்பீட்டை விட அதிகம் ( :ரு. 4208 .00 ) |
| 3 | திரு. சுந்தர் | 10.62% அதிகம் ( :ரு.4231 46) |

**அ.குறிப்பு**: பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளி அளித்தவர்களில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.13% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.922: குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தை வளாகத்தில் கட்டப்பட்ட கலைஞர் கருணாநிதி வளாகத்தில் மேல்தளத்தில் கடை எண். 33 முதல் 37 வரை மற்றும் 60 முதல் 64 வரை 10 கடைகளை BSNL அலுவலகமாக மாற்றி அதற்கு தேவையான கதவு, ஜன்னல், அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கும் மற்றும் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைப்பதற்கும் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 27.02.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரா் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டினை விட |
|---|---|---|
| 1 | திரு.எம்.எம்.கிளீட்டஸ் | 4.29%மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 3,04,688.00) |
| 2 | திரு. ஜாண் ரெக்ஸிலின் ஜோஸ் | 7.83% மதிப்பீட்டை விட அதிகம் ( :ரு. 3,15,024. 00) |

**அ.குறிப்பு**: 1 .பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

2. மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 16.02.2009–ம் தேதிய 769–ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
3 பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டினை விட அதிகமாக உள்ளது. இதில் திரு.எம்.எம். கிளீட்டஸ் என்பவர் 4.29% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர்.
4. நகராட்சியின் அவசரம், அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.923: குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.எம்.கிளீட்டஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

KSSS சுனாமி குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் அதனை சீர் செய்வதற்கு கழிவுநீர் உறிஞ்சி வாகனம் மூலம் கழிவுநீரினை உறிஞ்சுவதற்கு 10.07.2009–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரா் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டினை விட |
|---|---|---|
| 1 | M/s.அசோக் செப்டிக் டேங்க் கிளினீங் நாகர்கோவில். | 16.67% அதிகம். ( ரூ. 42,000/–) |
| 2 | M/s.உதயகுமார் ஏர்கம்ரசர் செப்டிக் டேங்க் கிளினீங் நாகர்கோவில். | மதிப்பீட்டு விகிதம் ( ரு.36,000/–) |

<u>அ.குறிப்பு</u>: 1 .பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

2. மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 29.05.2009–ம் தேதிய 818–ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

3. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.உதயகுமார் ஏர்கம்ரசர் செப்டிக் டேங்க் கிளினீங் நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.924: குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.உதயகுமார் ஏர்கம்ரசர் செப்டிக் டேங்க் கிளினீங் நாகர்கோவில்.அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன்கீழ், கீழ்க்காணும் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | செலவின விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினகரன் தினசரி நாளிதழ் ஆணையருக்கு 01.08.2008 முதல் 13.06.2009 முடிய வாங்கிய வகைக்கும் (செலவினம் ரூ. 1,046/–) ஊதியக்குழு நிலுவைத் தொகை வழங்குவது குறித்த ரப்பர் ஸ்டாம்ப் செய்த வகைக்கும். (செலவினம் ரூ.260/–) | ரூ. 1,306/– |

அ.குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.925: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2009 ஜுலை திங்கள் 31.07.2009–ம் நாள் வெள்ளிகிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**முன்னிலை. திரு.ஜே.ஜேசையா அவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்.**

**வருகை புரிந்தோர்.** திருமதி.மேரி அல்போன்சாள், திருமதி.A.T.லதா, திரு.எம்.சுரேஸ், திருமதி.செலஸ்டினம்மாள், திரு.லியோன்ஸ், திரு.பிரான்சிஸ் அமலதாஸ், திரு.இயேசுதாசன், திருமதி.ஜாண்சி, திருமதி.லூர்துமேரி, திரு.முருகன், திரு.நசீம், திருமதி.சீதை மற்றும் திருமதி.ஷீலாஜெயந்தி ஆகியோர்.

**பொருள் எண் : 1**

12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் 2008–09–மூ ஆண்டுக்கு மின் ஆளுமை மற்றும் மின்கட்டணம் செலுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக இந்நகராட்சிக்கு ரூ. 2,40,494/– வரப்பெற்றுள்ளது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் வானவில் தமிழ் மென்பொருள் ரூ.15,000/– செலவிலும் 6 டோனர்கள் ரூ. 31,886/– செலவிலும் வாங்கப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தின்கீழ் மீதம் ரூ. 1,93,608/– இருப்பு உள்ளது. எனவே இத்திட்டத்தின்கீழ் இருப்பில் உள்ள தொகை ரூ. 1,93,608/–க்கு கீழ்க்காணும் பொருட்கள் வாங்குவதற்கும், அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| | | | உத்தேச செலவினம் |
|---|---|---|---|
| (1) **Computer and Printer :** | - | | |
| Desktop Computer | - | 1 No. | Rs, 1,05,000/- |
| Printer (HPL JP 3005 DN) | - | 2 Nos. | |
| Printer (H.P.LJP 1007 ) | - | 1 No. | |
| (2) **Dot Matrix Printer Ribbon Cassette :** | | | |
| TVS MSP 455 (130 column) | - | 5 Nos | Rs, 10,500/- |
| TVS MSP 430 (80 column) | - | 5 Nos | |
| A4 Sheet Paper | - | 5 Box | |
| (3) **Toner Refill** | | | |
| Toner Refill பண்ணுவதற்கு | – | 5 எண்ணம் : | ரூ. 3,500/– |
| (4) **UPS Battery** : | | | |
| 5 KVA UPS பயன்படுத்தாமல் உள்ளதை சர்வீஸ் செய்து புதிய பேட்டரி வாங்கிப் பொருத்த | – | | ரூ.75,000/– |
| மொத்தம் | – | | ரூ. 1,94,000/– |

**அ.குறிப்பு :**

அ) மேற்காணும் பொருட்கள் வாங்குவதற்கும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,94,000/– க்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேலும் வ.எண். 1–ல் தெரிவிக்கப்பட்டுள்ள பொருட்களை DGSD விலை விகிதத்தில் வாங்கலாம்.. வ.எண். 2–ல் தெரிவிக்கப்பட்டுடுள்ள பொருட்களை ஏதேனும் ஒரு கூட்டுறவு அச்சகத்தில் இருந்து வாங்கலாம். வ.எண்.3–ல் தெரிவிக்கப்பட்டுள்ள டோனர் ரீபில் பணியினை விலைப்புள்ளிகள் பெற்றும், வ.எண். 4–ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரியும் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.926: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் ஆசாத்நகர் பகுதியில் காரிதாஸ் காலனி மற்றும் KSSS காலனி என்ற புதிய குடியிருப்புகள் கட்டி கொடுக்கப்பட்டது. அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு அரசால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.17.00 லட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றி உதவி செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாகர்கோவில் அவர்களின் கடிதம் எண். F.Tsunami/AEE/Urban/2007 நாள் 11.09.2007 நாளைய கடிதத்தின்படி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. குளச்சல் நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண். 453 நாள் 30.01.2008 மூலம் ஏற்றெடுத்துள்ளது.

மேலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்கீழ் அந்த கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து அருகில் உள்ள வீடுகளுக்கு எரிவாயு அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் கடித எண். அ3/2073/2006 நாள் 02.11.2007 நாளைய கடிதத்தின்படி குளச்சல் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. அதன்படி குளச்சல் நகர்மன்றம் தனது தீர்மான எண். 396 நாள் 28.11.2007–ன்படி ஏற்றெடுத்துள்ளது. ஆனால் சுத்திகரிப்பு வசதி நீர்த்தேக்கப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்தின் செயலாக்க நிலையின் அய்யப்பாடு பற்றி நகராட்சி நிர்வாகம் தனது கருத்தினை அப்போதே தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்கீழ் அமைக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையமானது நீர்தேக்கப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் சேகரிக்கப்பட்ட கழிவுநீர் வெளியேற வாய்ப்பு இல்லாமல், அதனை சுற்றியுள்ள பகுதியில் தேங்கி உள்ளது. அதனால் தற்போது பாதாள சாக்கடை குழாய் முழுவதும் கழிவுநீரால் நிரம்பி வீடுகளிலும் கழிவுநீர் புகுந்து உள்ளது. இதனால் சுகாதாரக் கேடு ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குளச்சல் நகராட்சியால் அதனை சீர் செய்யும் முயற்சியாக 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் உறிஞ்சு லாரி மூலம் 12 லோடு கழிவுநீர் உறிஞ்சி வெளியேற்றப்பட்டது. ஆயினும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படாமலும், கழிவுநீர் சாலை ஓரத்திலும், வீடுகளிலும் புகுந்த வண்ணம் உள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 16.03.2009 அன்று இவ்வலுவலகம் மூலம் தக்க அறிவுரை மற்றும் மேல்நடவடிக்கை வேண்டப்பட்டது.

தற்போது மாவட்ட ஆட்சியத்தலைவர் அவர்களின் கடிதம் எண். எச்1/252222/2009 நாள் 06.07.2009 மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து இந்நகராட்சி மூலமும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 23.07.2009 –ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது கொட்டில்பாடு சுனாமி காலனிப் பகுதியில் கழிவுநீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது..

**<u>அ.குறிப்பு</u>** – மன்றம் இது குறித்து பரிசீலிக்கலாம்.

**தீர்மானம் எண்.927: தற்போது ஏற்பட்டுள்ள அடைப்பினை மாற்றுவதற்கு மீண்டும் ஒருமுறை உறிஞ்சு லாறிமூலம் உறிஞ்சி எடுக்கலாம். அதற்கான செலவிற்கு ஒப்புதலளித்து மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

துணை கண்காணிப்பு பொறியாளர், TWAD திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 06.07.2009 அன்று நடைபெற்ற குடிநீர் விநியோகம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் விநியோகம் செய்யப்படும் குடிநீரினை அடிக்கடி சோதனை செய்து அறிக்கை அனுப்பும்படி கோரப்பட்டுள்ளதால் அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிறுத்தப்பட்டுள்ளது. அதன்படி வினியோகம் செய்யப்படும் குடிநீரின் தரத்தினை 2009–2010 ஆம் ஆண்டுக்கு சோதனைக் கூடம், நாகர்கோவில் மூலம் ஆய்வு மேற்கொள்வதற்கு உபகரணங்கள் மற்றும் சோதனைக் கட்டணம் உட்பட உத்தேச செலவுத் தொகை ரூ. 10,000/– க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2945/09/இ1)

**தீர்மானம் எண்.928: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தின் முன்புறம் ஆர்ச் அமைப்பதற்கு ஒப்பந்ததாரர் திரு.எம்.எம்.கிளீட்டஸ் என்பவரால் காங்கிரீட் பில்லர் 5 எண்ணம் அமைக்க பணி நடைபெறும் போது விபத்து நடைபெற்றதால் பணி கைவிடப்பட்டது. மேலும் நகர்மன்ற தீர்மான எண். 543, நாள் 25.04.2008–ன்படி, 5 பில்லர்களில் 3 பில்லர்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கும், 2–ல் ஆர்ச் அமைப்பதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, கடிதம் எண். 40051/08/இ2 நாள் 01.09.2008 மூலம் 3 பில்லர்களை இடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் இடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட 3 பில்லர்களும் இடிக்கப்பட்டதில் அதன் பவுண்டேசன் மற்றும் Footing - ஐ ஆராய்ந்து பார்த்ததில் அவற்றில் ஆர்ச் அமைப்பதற்கு தேவையான (Stability) குறித்து ஐயப்பாடு எழுந்துள்ளது. ஆகவே மீதமுள்ள 2 பில்லர்களில் ஆர்ச் அமைப்பது குறித்து மீண்டும் நகர்மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பரிசீலித்து முடிவு செயயயலாம்.

(ந.க.எண்.1998/08/அ2)

**தீர்மானம் எண்.929: பொருளில் கொடுக்கப்பட்டுள்ளபடியான தொழில்நுட்ப ஆய்வில், பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய இரண்டு தூண்களின் stablity பொறுத்தமட்டில், ஐயப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதால், அதன் மீது Arch அமைப்பது என்பது ஆபத்தான காரியம் என்று இந்த மன்றம் கருதுவதால், மேற்படி இரண்டு தூண்களையும் இடித்து மாற்றுவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை சம்புவில் உள்ள 12 ½ H.P. Motor பழுது Bore No.6 ல் உள்ள 10 H.P. Motor, பழுது Bore No.12 ல் உள்ள மோட்டார் மற்றும் பைப் பழுது ஆகிய பழுதுகளை சரி செய்தற்கு ரூ.37,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 02.07.2009–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 0.18%மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 36,910.00) |
| 2 | திரு.எஸ்.டேவிட் ராஜ் | 5.08% மதிப்பீட்டை விட அதிகம் ( :ரு. 38,855.00) |

**அ.குறிப்பு:** (1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 29.05.2009–ம் தேதிய 868–ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3.) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.18% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.278/09/அ2)

**தீர்மானம் எண்.930: குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்திலும் அமைந்துள்ள கடைகளின் ஏலதாரர்கள் கடைகளின் வாடகையினை செலுத்தாததால் மறு ஏலத்தில் விட இந்நகர்மன்றம் அனுமதி வழங்கியதன் பேரில், மேற்படி கடைகளை மூன்றாம் முறையாக 09.07.2009–ல் ஏலம் விடப்பட்டது. ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்கள் வைப்புத் தொகை செலுத்தி கீழ்க்கண்டவாறு ஏலக் கேள்வி கேட்டுள்ளார்கள். ஏலக் கேள்வி விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

A. கலைஞர் கருணாநிதி வணிக வளாகம்

| வ எண் | கடை எண். | ஏலதாரர் பெயர் | முன் வைப்பு தொகை | தற்போது உள்ள கடை வாடகை விவரம் | டுபிட்கோ நிறுவனம் நிர்ணயம் செய்த வாடகை | ஏலக்கேள்வி தொகை | | | தற்போதுள்ள வாடகைக்கும் ஏலம் கேட்கப் பட்டதற்கும் உள்ள குறைவு தொகை | டுபிட்கோ நிர்ணயம் செய்த வகைக்கும் ஏலம் கேட்கப்பட்ட வகைக்கும் உள்ள கூடுதல் தொகை | கூடுதல் ஏலம் கேட்டவர் பெயர் மற்றும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 25.3.09 | 17.06.09 | 09.07.09 | | | |
| 1 | 1 | நிர்மலா<br>மரிய ஜெரோம் | 25000/– | 3250/– | 1500/– | – | 950/–<br>900/– | 1530/–<br>1525/– | 1720/– | 30 | நிர்மலா<br>ரு 1530/– |
| 2 | 2 | மரிய ஜெரோம்<br>நிர்மலா | 25000/– | 3500/– | 1500/– | – | 900/–<br>950/– | 1520/–<br>1525/– | 1975/– | 25 | நிர்மலா<br>ரூ1525/– |
| 3 | 3 | ஜோன்ஸீன்பினோ<br>ஜெகதீஸ் | 25000/– | 2850/– | 1500/– | – | ஏலம்<br>கேட்கவில்லை<br>1200/– | 1515/–<br>1520/– | 1330/– | 20 | ஜெகதீஸ்<br>ரூ 1520/– |
| 4 | 4 | சபீக் அகமது<br>முஜிப் அகமது | 25000/– | 3100/– | 1500/– | – | 1000/–<br>ஏலம்<br>கேட்கவில்லை | 1525/–<br>1520/– | 1575/– | 25 | சபீக்<br>அகமது<br>ரூ 1525/– |
| 5 | 5 | ஞானசேகர்<br>செல்வகுமார்<br>செல்வராஜ் | 25000/– | 3100/– | 1500/– | – | 1000/–<br>ஏலம்<br>கேட்கவில்லை<br>ஏலம்<br>கேட்கவில்லை | 1520/–<br>1515/–<br>Deposit Refund | 1580/– | 20 | ஞானசேகர்<br>ரூ 1520/– |
| 6 | 6 | பாத்திமா<br>சுரேஷ்<br>சுபைல்<br>பார்த்திபன் | 25000/– | 2800/– | 1500/– | – | ஏலம்<br>கேட்கவில்லை<br>ஏலம்<br>கேட்கவில்லை<br>ஏலம்<br>கேட்கவில்லை | 1520/–<br>1515/–<br>Deposit Refund<br>Deposit Refund | 1280/– | 20 | பாத்தீமா<br>ரூ 1520/– |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 7 | பால்தாஸ்<br>காந்திமதி<br>கிளாடி | 25000/– | 3500/– | 1500/– | – | 900/–<br>950/–<br>1000/– | 1525/–<br>1515/–<br>1530/– | 1970/– | 30 | கிளாடி<br>ரூ 1530/– |
| 8 | 8 | பால்தாஸ்<br>வரதராஜன்<br>பார்த்திபன் | 25000/– | 2000/– | 1500/– | –<br>– | 1050/–<br>–<br>ஏலம்<br>கேட்கவில்லை | 1515/–<br>1510/–<br>Deposit<br>Refund | 485/– | 15 | பால்தாஸ்<br>ரூ.1515/– |
| 9 | 9 | பால்தாஸ்<br>வரதராஜன்<br>பார்த்திபன் | 30000/– | 3950/– | 1500/– | –<br>–<br>– | 1050/–<br>–<br>ஏலம்<br>கேட்கவில்லை | 1920/–<br>1915/–<br>Deposit<br>Refund | 2030/– | 420 | பால்தாஸ்<br>ரூ.1920/– |
| 10 | 10 | முருகதாஸ்<br>அஜிதா | 30000/– | 5100/– | 1500/– | – | 1000/–<br>1010/– | 1915/–<br>1920/– | 3180/– | 420 | முருகதாஸ்<br>ரூ 1920/– |
| 11 | 11 | முருகதாஸ்<br>அஜிதா | 30000/ | 4000/– | 1500/– | – | 1000/–<br>1010/– | 1920/–<br>1925/– | 2075/– | 425 | அஜிதா<br>ரூ 1925/– |
| 12 | 25 | பால்தாஸ்<br>வரதராஜன் | 25000/– | 2500/– | 1500/–<br>– | –<br>– | –<br>– | 1520/–<br>1515/– | 980/– | 20 | பால்தாஸ்<br>ரூ.1520/– |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்** | | | | | | | | | | | |
| 13 | 5 | யூசுப்<br>அப்துல் சுபுகான் | 20000/– | 2500/– | 1500/– | –<br>– | –<br>– | 1520/–<br>1515/– | 980/– | 20 | யூசுப்<br>ரூ.1520/– |
| 14 | 6 | சுல்தான்<br>அப்துல் பசீர் | 20000/ | 2200/– | 1500/– | –<br>– | 900/–<br>925/– | 1530/–<br>1525/– | 670/– | 30 | சுல்தான்<br>ரூ.1530/– |
| 15 | 7 | சுல்தான்<br>அப்துல் பசீர் | 20000/ | 3150/– | 1500/– | –<br>– | 900/–<br>1000/– | 1520/–<br>1515/– | 1630/– | 20 | சுல்தான்<br>ரூ.1520/– |
| 16 | 12 | கலை செல்வி<br>ஸ்ரீகுமார் | 20000/ | 3425/– | 1500/– | –<br>– | 825/–<br>800/– | 1520/–<br>1515– | 1905/– | 20 | கலை<br>செல்வி<br>ரூ.1520/– |

<u>அ.குறிப்பு :</u>
மேற்காணும் கடைகளை 25.03.2009 அன்று ஏலம் கோரியதில் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே 17.06.2009 அன்று இரண்டாம் முறையாக மறுஏலம் கோரியதில் டுபிட்கோ நிறுவனத்தார் நிர்ணயம் செய்துள்ள வாடகையினைவிட குறைவாக ஏலம் கேட்டுள்ளனர். எனவே 09.07.2009 அன்று மூன்றாம் முறையாக மறு ஏலம் கோரப்பட்டதில் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள் 5, 6, 7, 12 மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 25 ஆகியவைகளுக்கு டுபிட்கோ நிறுவனத்தார் நிர்ணயம் செய்த வாடகையை விட கூடுதலாக ஏல
கேள்வி கேட்டுள்ளனர். மூன்று முறை ஏலம் கேட்டும், தற்போதுள்ள கடை வாடகையினை விட குறைவாகவே ஏலம் கேட்டுள்ளனர். ஆனால் டுபிட்கோ நிறுவனத்தார் கேட்டுள்ள வாடகையினை விட கூடுதலாக கேட்டுள்ளனர். எனவே மூன்றாம் முறையாக கேட்கப்பட்ட ஏலக் கேள்வியினை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.931: அலுவலக குறிப்பில் கூறப்பட்டுள்ளபடி TUFIDCO நிறுவன நிர்ணயமதிப்பினைக் காட்டிலும் கூடுதலாக கேள்வி கேட்கப்பட்டுள்ளதாலும், மூன்று முறை ஏலம் விடப்பட்டுள்ளதாலும், மேலும் நீட்டிப்புச் செய்யும்பட்சத்தில் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படும் என்பதாலும், ஏலதாரர்களின் ஏலக்கேள்வியை ஏற்றுக்கொண்டு உத்தரவு வழங்கிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 7</u>

அலுவலக சில்லரைச் செலவினங்களை மேற்கொள்வதற்கு அலுவலக முன்பணமாக ரூ.500/— (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது. தற்போது விலைவாசி உயர்ந்த வண்ணம் உள்ளது. இந்நிலையில் ரூ.500/— சில்லரை செலவினங்களை மேற்கொள்ள மிகவும் கடினமாக உள்ளது. எனவே நிர்வாக நலன் கருதி அலுவலக முன்பணமாக ரூ. 500/— வழங்குவதை ரூ.1,000/— ஆக உயர்த்தி வழங்குவதற்கு நகர்மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அ.குறிப்பு —** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.932: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் தள்ளுவண்டிகளின் பழுது நீக்குதல், பொது சுகாதார இதர சில்லறை செலவினங்களுக்கு ஆகும் செலவுகளை சொந்த கையிருப்பு பணத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்படி செலவினங்களுக்கு அலுவலகத்தில் இருந்து முன்பணமாக ரூ. 1,000/— பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு —** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.933: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் சம்மந்தமான சிறுசிறு சில்லறை செலவினங்கள் மேற்கொள்வதற்கும் திட்டப்பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்ய தேவையான சிறு செலவினங்களுக்கும் மற்றும் குடிநீர், தெருவிளக்கு பராமரிப்பிற்குத் தேவையான உதிரிச் சாமான்கள் வாங்குவதற்கு பொறியியல் பிரிவிற்கு முன்பணமாக ரூ. 1,000/— தேவைப்படுகிறது. எனவே மேற்கண்ட தொகை பெறுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு —** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.934: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

சொர்ண ஜெயந்தி திட்டம் 2008—2009—ம் ஆண்டிற்கு பயிற்சி பிரிவிற்கு வரப்பெற்ற தொகை ரூ.47,000/— மட்டும். இத்தொகையை செலவிடும் நடவடிக்கையாக கணினி பயிற்சி அளிப்பதற்கு (M.S.Office) கீழ்க்கண்ட 3 நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பயிற்சி மையத்தின் பெயர் | நபர் 1—வருக்கு | பயிற்சி காலம் |
|---|---|---|---|
| 1 | சன் கம்பியூட்டர் கல்வி நிலையம், குளச்சல் | ரூ. 100/— | 1 மாதம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | பிட்ஸ் கம்பியூட்டர் கல்வி நிலையம், குளச்சல் | ரூ. 900/— | 3 மாதம் |
| 3 | யுனிக்யூ கம்பியூட்டர் கல்வி நிலையம், குளச்சல் | ரூ. 1250/— | 3 மாதம் |

மேற்கண்ட மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.6536/08/எச்2)

**தீர்மானம் எண்.935: ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட KSSS காலனியில் கதவு எண். 4/692—க்கு எதிராக உள்ள பொதுக்குழாயில் இருந்து மேலாக க.எண்.4/681 வரை பகிர்மான குழாய் இல்லை. இதனால் அங்குள்ள வீடுகளில் உள்ள குடிநீர் இணைப்பில் தண்ணீர் மிகவும் குறைவாக வருகிறது. எனவே பொதுக்குழாயில் இருந்து க.எண். 4.681 வரை 2" விட்டமுள்ள பிவிசி குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 27,000/— செலவாகும். எனவே மேற்கண்ட பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.936: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

குளச்சல் நகராட்சியில் 2009—10 ஆம் ஆண்டிற்கு தெருவிளக்குகள் பராமரிப்பதற்கு உதிரி பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு தினமுரசு நாளிதழில் 18.07.2009 அன்று விளம்பரம் செய்த வகையில் தினமுரசு நாளிதழுக்கு ரூ. 1800/— வழங்கும்படி கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.937: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

குளச்சல் நகராட்சியில் 2009—10 ஆம் ஆண்டிற்கு தெருவிளக்குகள் பராமரிப்பதற்கு உதிரி பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் தினத்தந்தி நாளிதழுக்கு ரூ. 2565/— வழங்கும்படி கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.938: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டில் 140mm P.V.C. line உடைவு ஏற்பட்டுள்ளது. மேற்காணும் உடைவை சரி செய்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.2950/— செலவாகும். மேற்காணும் பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.939: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரையில் 6" Pumping. line உடைவு, மாதாகாலனி கழிப்பறையில் line உடைவு ஏற்பட்டுள்ளது. மேற்காணும் உடைவுகளை சரி செய்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.4000/— செலவாகும். எனவே மேற்காணும் பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.940: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனி சத்துணவுக்கூடம் அருகில் லைன் உடைவு. ஈழக்காணி விளையில் பகிர்மானக் குழாயில் End cup பொருத்த வேண்டியுள்ளது, மற்றும் Bore Well 3–ல் Pipe Nipple உடைவு, பர்னட்டிவிளையில் Air Valve –ல் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 3100/– எனவே மேற்கண்ட பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.941: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் கடிதத்தின்படி, குளச்சல் நகராட்சியில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகளை வெளியிடும் செய்தி மலரின் சந்தா காலம் 22.07.2009–ம் தேதியுடன் முடிவடைவதால் அடுத்த ஓர் ஆண்டிற்கான சந்தாவினை புதுப்பித்து கொள்வதற்கு ரூ. 600/– செலுத்த கோரியுள்ளது. மேலும் இந்நகராட்சியில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகளை வெளியிட வேண்டியுள்ளதால் சந்தாவினை புதுப்பிப்பதற்கு ரூ. 600/– மேற்கண்ட நிறுவனத்திற்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.942: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

குளச்சல் நகராட்சியில் உள்ள மினி லாறி TN-74-5507 –யிவ் கீழ்கண்ட பழுதுகள் ஏற்பட்டுள்ளன.

(1) பேட்டரியில் தண்ணீர் வடிதல்
(2) 2 வீல் சிலிண்டர் கிட் மாற்றுதல்
(3) கிளச் சிலிண்டர் கிட் மாற்றுதல்

மேற்கண்ட பணியினை செய்வதற்கு ரூ. 2000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 17.07.2009–ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி மதிப்பீடு |
|---|---|---|
| 1 | மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | ரூ. 1975.00 |
| 2 | KSSS ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில் | ரூ. 2115.00 |
| 3 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் | ரூ. 2290.00 |

**அ.குறிப்பு**: பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் மணி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனம் ரூ.1975/–க்கு மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

(ந.க.எண்.7219/08/எச்1)

**தீர்மானம் எண்.943: மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளியை கொடுத்துள்ளார். அவரது விலைப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்கிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்கு தேவையான ஆவணங்களை ஜெராக்ஸ் எடுப்பதற்கு புதிய கேனான் ஜெராக்ஸ் இயந்திரம் வாங்குவதற்கு 28.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | சக்தி காப்பியர்,<br>17/5. பெருமாள் தெற்கு ரத வீதி,<br>திருநெல்வேலி. | ரூ. 79,650/– |

| | | |
|---|---|---|
| 2 | ஓர்.எஸ் .டெக்னாலஜீஸ்,<br>68E, சன்யாசி கிராமம்,<br>குடிநீர் தேக்க தொட்டி அருகில்,<br>திருநெல்வேலி. | ரூ. 83,300/– |

**அ.குறிப்பு**: (1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). ஜெராக்ஸ் இயந்திரம் வாங்குவதற்கும், உத்தேச செலவுத் தொகை ரூ.80,000/–க்கும் இந்நகர்மன்றம் தனது 30.06.2009–ம் தேதிய 885–வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3). வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெஸர்ஸ். சக்தி காப்பியர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

(ந.க.எண்.2704/09/இ1)

**தீர்மானம் எண்.944: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலையில் அமைந்து இருக்கும் தலைவர், முஸ்லீம் முஹல்லம் சொந்தமான கட்டிடத்திற்கு புதிய வரிவிதிப்பு செய்யக் கோரி மனு பெறப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் உபயோகம் அரபி பாடசாலை – இலவச கல்விக்காக என மனுவில் குறிப்பிட்டுள்ளது. ஆனால் பாடசாலை நடத்துவதற்கு அரசின் அங்கீகாரம் எதுவும் பெறப்படவில்லை. எனவே இக்கட்டிடத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதிகளின்படி வரி விலக்கோ (அல்லது) குடியிருப்பாகவோ விரி விதிப்பு செய்ய இயலாது. எனவே இக்கட்டிடத்திற்கு வணிக நோக்கத்திற்கென வரிவிதிப்பு செய்வது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ1/1065/09)

**தீர்மானம் எண்.945: அரபிக் பாடசாலை என்பது இஸ்லாமிய தொழுகைக்கூடத்துடன் இணைந்துள்ள, சமயக்கல்வி இலவசமாக பயிற்றுவிக்கும் பள்ளி. இதனை சாதாரண பள்ளிக்கூடமாகக் கருதிவிட இயலாது, சமய வழிபாடுகளின் ஒரு பகுதிக்கூடமாகத்தான் கருதிட முடியும் என்று இம்மன்றம் ஏகமனதான கருத்தினைக் கொண்டுள்ளதால், சொத்துவரி விதிப்பிலிருந்து முழு விலக்கு அளித்திடவும், மின்இணைப்பு வசதிக்கு வேண்டி கதவு எண் கொடுத்திடவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தில் உள்ள கீழ்குறிப்பிடும் கடைகளுக்கு உரிமக் காலம் அதன் எதிரில் குறிப்பிட்ட தேதிகளில் முடிவடைவதால் அக்கடைகளுக்கான உரிமத்தினை மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்தும், வாடகைத் தொகையினை 15% உயர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண் | ஏலதாரர் பெயர் | தற்போதைய வாடகை | உரிமம் முடிவடையும் காலம் | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகைத் தொகை | உயர்வுக்கு பின்னர் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய தொகை | எந்த தேதியிர் இருந்து |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | காலியிட கடை | S.M.யூசுப்கான் | 331/– | 31.01.2009 | 50/– | 381/– | 01.02.2009 |
| 2 | 23 | ஜி. டிகால் | 518/– | 31.01.2009 | 78/– | 596/– | 01.02.2009 |
| 3 | 10 | ரவீந்திரன் | 805/– | 31.01.2009 | 121/– | 926/– | 01.02.2009 |
| 4 | 32 | சகாய ஜாண்ஜில்ட் | 3850/– | 31.03.2009 | 578/– | 4428/– | 01.04.2009 |
| 5 | 33 | சகாய ஜாண்ஜில்ட் | 650/– | 31.03.2009 | 98/– | 748/– | 01.04.2009 |

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ2/440/04)

**தீர்மானம் எண்.946: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

குளச்சல் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2009–10 ஆம் ஆண்டிற்கு செயல்படுத்த மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி பொதுமக்கள் சார்பாக பங்குத் தொகை ரூ. 3.00 இலட்சத்தை ஜேம்ஸ் மருத்துவமனை மற்றும் அறக்கட்டளை நிறுவனத்தாரால் செலுத்தப்பட்டு, இரண்டு பங்கு அரசு நிதியுடன் மொத்தம் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் குளச்சல் நகராட்சி சிங்கன்காவு சாலையில் ஒற்றைக்கண் பாலம் முதல் சிங்கன்காவு கிணறு வரை மேல்மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ3/1245/2009 நாள் 27.07.2009–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தகவல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.947: பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 23**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.எம்3/54536/07 நாள் 28.02.2008–ல் குளச்சல் நகராட்சி எல்கையையொட்டியுள்ள உப்பளம் புறம்போக்கு பகுதியில் சர்வே எண். 204/1–ல் 4.05 ஹெக்டேர் நிலம் நகராட்சிக்கு வழங்கப்பட்டது. அந்த இடத்தில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கக் கூடாது என்று திரு.எம். சசி என்பவர் வழக்கு எண். W.P.(MD) No. 8491/2008–ன்படி மதுரை உயர்நீதி மன்றத்தில் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை பெறப்பட்டது. அதன்பேரில் மேற்படி வழக்கறிஞர் செலவுத் தொகை ரூ.5,000/– ஐ வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.948: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் IDSMT திட்டத்தின்கீழ் 2004–05–ல் செலவிடப்படாமல் மீதம் உள்ள தொகைக்கு பணிகள் தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தினமலர் நாளிதழில் 11.07.2009 அன்று விளம்பரம் செய்த வகையில் தினமலர் நாளிதழுக்கு ரூ.1,800/– வழங்கும்படி கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.949: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25**

மனுதாரர் அசோசியேட் சர்ச், பர்னட்டிவிளை பகுதியில் சர்வே எண்.B1-11/27–ல் சர்ச் அமைந்துள்ளது. இந்த சர்ச்சை இடித்து விட்டு புதிய சர்ச் கட்ட அனுமதி கேட்டுள்ளார். சர்ச் கட்டுவதற்கு நகராட்சி அனுமதி வழங்க இயலாது. கட்டிட விதிப்படி 6/47–ன்படி மாவட்ட ஆட்சித்தலைவரின் முன் அனுமதி பெற வேண்டும். எனவே மனுதாரர் வரைபடம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மன்றப் பொருள் வைத்து தீர்மான நகல் கேட்டுள்ளார். எனவே மனுதார் அப்போஸ்தரிக் சர்ச் கட்ட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1127/09/TPI)

**தீர்மானம் எண்.950: ஒப்புதல் வழங்குவதற்கு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 26**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்கும் பணிக்கு 2009–10–ம் ஆண்டிற்கு உதிரி பொருட்கள் வாங்குவதற்கு ரூ.5,70.,000/– மதிப்பீட்டில் வினியோகம் செய்வதற்கு 28.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீடு |
|---|---|---|
| 1 | M/s,.சென்னை லைட்டிங் (பி) லிட், சென்னை | ரூ. 4,36,185/– |

| | | |
|---|---|---|
| 2 | M/s.JES எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துவபுரம் | %. 4,33,132/– |
| 3 | B.M. டிரேடர்ஸ், நாகர்கோவில் | ரூ. 6,12,652/– |

**அ.குறிப்பு**: **(1)** பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.JES எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் ரூ.4,33,132/–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

(2) மேற்கண்ட பணிக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். 890 நாள் 30.06.2009 மூலம் ரூ.5,70,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

**தீர்மானம் எண்.951: குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.JES எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துவபுரம் நிறுவனத்தார்க்கு வேலையுத்தரவு வழங்கிட மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்திருக்கும் மீன் மார்க்கெட் Shed –ஐ பலப்படுத்தும் பணிக்கு ரூ.1,10,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 28.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 0.84% மதிப்பீட்டை விட அதிகம் ( ரூ. 1,07,446/–) |
| 2 | திரு. எஸ்.டேவிட்ராஜ் | 0.002% மதிப்பீட்டை விட குறைவு ( :ரு. 1,06,544.50) |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 30.06.2009–ம் தேதிய 899–வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3). பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெஸர்ஸ். திரு.எஸ்.டேவிட்ராஜ் என்பவர் 0.002% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.952: குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.டேவிட்ராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 28**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் அமைந்திருக்கும் 9–ம் எண் கழிப்பிடத்தில் செப்டிக் டேங்கிற்கு செல்லும் கழிவுநீர் ஓடை பழுதடைந்து கழிவுநீர் கசிந்து செல்கிறது. எனவே கழிவுநீர் செல்லும் பழுதடைந்துள்ள ஓடையினை மாற்றி புதிதாக ஓடை கட்டுவதற்கு ரூ.32,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 28.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 0.16% மதிப்பீட்டை விட அதிகம் ( ரூ. 28,620/–) |
| 2 | திரு. எஸ்.டேவிட்ராஜ் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு ( :ரு. 28,555.50) |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 30.06.2009–ம் தேதிய 887–வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3). பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.டேவிட்ராஜ் என்பவர் 0.06% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.953: குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.டேவிட்ராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 29**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கீழ் துறைமுகத்தெருவில் IDSMT திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணிக்கு ரூ .5,50,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 22.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவகாிம் சேம் | 4.90% மதிப்பீட்டை விட அதிகம்<br>( ரூ. 5,52,049.00) |
| 2 | திரு. எஸ். சத்தியதாஸ் | 6.82% மதிப்பீட்டை விட அதிகம்<br>(ரூ. 5,62,126.00) |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 30.06.2009–ம் தேதிய 898–வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3). பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இதில் திரு.சி.தேவகாின் சேம் என்பவர் 4.90% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.954: ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.தேவகாீம்சேம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 30**

IDSMT திட்டத்தின்கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பழைய மார்க்கெட் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் ‘ பணிக்கு ரூ .6,60,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 22.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவகாின் சேம் | 9.92% மதிப்பீட்டை விட அதிகம்<br>( ரூ. 7,20,350.00) |
| 2 | திரு. எஸ். சத்தியதாஸ் | 4.97% மதிப்பீட்டை விட அதிகம்<br>(ரூ. 6,87,910.35) |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 30.06.2009–ம் தேதிய 898–வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3). பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இதில் திரு.எஸ்.சத்தியதாஸ் என்பவர் 4.97% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.955: ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.சத்தியதாஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 31**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாரிமார் தெரு மற்றும் செட்டியத்தெரு (மேலத்தெரு) வின் தென்பகுதி ஆகிய தெருக்களில் IDSMT திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணிக்கு ரூ .10,00,000/— மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 22.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. செல்ல நாடார் | 4.99% மதிப்பீட்டை விட அதிகம் ( ரூ. 10,47,508.60) |
| 2 | திரு. ஜே. ஜாண்றோஸ் | 9.08% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 10,88,322.00) |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 30.06.2009—ம் தேதிய 898—வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3). பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இதில் திரு.சி.செல்லநாடார் என்பவர் 4.99% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.956: ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.செல்லநாடார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 32**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட களிமார் பகுதியில் IDSMT திட்டத்தின்கீழ் களிமார் பாலம் முதல் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய அணுகுசாலை அமைக்கும் பணிக்கு ரூ .10,00,000/— மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 22.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. செல்ல நாடார் | 8.53% மதிப்பீட்டை விட அதிகம் ( ரூ. 10,76,409.00) |
| 2 | திரு. ஜே. ஜாண்றோஸ் | 4.97% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 10,41,102.25) |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 30.06.2009—ம் தேதிய 898—வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3). பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இதில் திரு.ஜே.ஜாண்றோஸ் என்பவர் 4.97% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.957: ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஜே.ஜாண்றோஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 33**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் முன்புறமுள்ள ஓடையானது பழுதடைந்து கழிவுநீர் வெளியே செல்கிறது. எனவே மேற்கண்ட ஓடையில் பேருந்து நுழைவு வாயிலில் உள்ள சிறு பாலத்தின் அருகில் புதிதாக ஒரு சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.1,40,000/— மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 28.07.2009 அன்று

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. எஸ். சத்தியதாஸ் | 11.44% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 1,39,806.00) |
| 2 | திரு.சி.தேவகரின் சேம் | 4.27% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 1,30,815.00) |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.
(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 30.06.2009–ம் தேதிய 888–வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
( 3). பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இதில் திரு.சி.தேவகரின் சேம் என்பவர் 4.27% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.958: ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.தேவகரீம்சேம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 34**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட KSSS காலனியில் ஜெர்மன் நாட்டு தொண்டு நிறுவனம் மூலம் கட்டப்பட்டு வரும் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் பிரதான குழாயினை அமைக்கும் பணிக்கு ரூ.7,50,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 28.07.2009 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவகரின் சேம் | 11.44% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.எம்.எம். கிளீட்டஸ் | 4.74% மதிப்பீட்டை விட அதிகம் |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தக்காரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.
(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 30.06.2009–ம் தேதிய 903–வது எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
( 3). பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இதில் திரு.எம்.எம்.கிளீட்டஸ் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ. 4.74% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிகிது.

**தீர்மானம் எண்.959: ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.எம்.கிளீட்டஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 35**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட 1–வது மற்றும் 2–வது வார்டுக்குட்பட்ட பவுண்டரி ரோட்டில் 63mm விட்டமுள்ள பிவிசி பகிர்மான குழாய் சுமார் 1600 மீட்டர் நீளத்திற்கு உள்ளது. அதில் இருந்து அழகுவிளை, தெற்கு கள்ளியடைப்பு, கல்லத்திவிளை, நடுக்கள்ளியடைப்பு மற்றும் வடக்கு கள்ளியடைப்பு பகுதிகளுக்கு குடிநீர் விநிகம் செய்யப்படுகிறது. 63mm விட்டமுள்ள பிவிசி பகிர்மான குழாய் வழியாக செல்வதால் மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் சீராக விநியோகம் செய்ய இயலாமல் உள்ளது. இதனால் மேற்கண்ட பகுதி பொதுமக்கள் குடிநீரின்றி

பாதிப்படைந்துள்ளனர். இதனை சரி செய்யும் பொருட்டு பவுண்டரி சாலையில் வி.கே.பி.பள்ளிக்கூடம் அருகிலிருந்து நடுக்கள்ளியடைப்பு வரையில் 110mm விட்டமுள்ள பகிர்மான குழாயும் அங்கிருந்து வடக்கு கள்ளியடைப்பு பிரியும் இடம் வரையிலும் 90mm விட்டமுள்ள பகிர்மான குழாயும் அமைத்தால் அப்பகுதி முழுவதும் குடிநீர் விநியோகம் சீராக நடைபெறும். எனவே மேற்கண்ட பணியினை செய்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,70,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.960: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகர்மன்றம்